# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1823/16 - 2013 අගෝස්තු 13 වැනි අඟහරුවාදා - 2013.08.13

*1823/16 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2011 ஆம் ஆண்டின் 287 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 13/97/ஈ/162.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : வீஏடீஏ/எஸ்டப்/எல்ஏஎன்டீ/ஏசீகியூ/10.

1972 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1974 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான பொருள்கோடல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 12) 18 ஆம் பிரிவின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2011.12.28 ஆந் திகதிய 1738/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழ் பிறப்பிக்கப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 287 ஆம் இலக்கக் கட்டளையை இத்தால் இரத்துச் செய்கின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.07.26.

08 - 884

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை*

*2013 ஆம் ஆண்டின் 257 ஆம் இலக்கக் கட்டளை*

எனது குறிப்பு இல. : 13/97/ஈ/162.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : வீஏடீஏ/எஸ்டப்/எல்ஏஎன்டீ/ஏசீகியூ/10.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.07.26.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், வடமராட்சி தென்மேற்கு, கரவெட்டி.


இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், அல்வை தெற்கு சிறு பிரிவில், கரவெட்டி வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள, யாழ்ப்பாணம் மாவட்ட நில அளவை அத்தியட் சகரினால் தயாரிக்கப்பட்ட 1998.10.01 ஆந் திகதிய யா. 1910 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட சுமார் 0.2532 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

01. **துண்டு இல. 1 - பாலவிருக்கை - விஸ்தீரணம் : 0.2532 ஹெக்டயார்**

வடக்கு : சனசமூக நிலையம், அடிப்பாதை ; கிழக்கு : அடிப்பாதை ; தெற்கு : திருமதி இராஜேஸ்வரி புலேந்திரன் உரிமை கோரும் பாலவிருக்கை எனும் காணி ; மேற்கு : திருமதி இராஜேஸ்வரி துறைராஜா உரிமை கோரும் பாலவிருக்கை எனும் காணி, சனசமூக நிலையம்.

08 - 885

---

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளை

2013 ஆம் ஆண்டின் 244 ஆம் இலக்கக் கட்டளை

எனது குறிப்பு இல. : 4/3/9/2011/டப்எஸ்/212.
பிரதேச செயலாளர் குறிப்பு இல. : வீஎஸ்டப்/டீஎஸ்/எல்ஏஎன்டீ/டப்எஸ்/2011.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ் அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.07.26.

அட்டவணை

1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்: பிரதேச செயலாளர், வலிகாமம் தென்மேற்கு, சண்டிலிப்பாய்.

2. காணியின் விபரம் : வட மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், சண்டிலிப்பாய் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில், ஜே/140 - மாணிப்பாய் கிராம உத்தியோகத்தர் பிரிவில், மாணிப்பாய் கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2012.02.26 ஆந் திகதிய யா/எஸ்என்டீ/2012/06 ஆம் இலக்க முதற் சுவட்டு வரைபடத்தில் துண்டு இல. 01 எனக் காட்டப்பட்ட சுமார் 0.2988 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

01. **துண்டு இல. 1 - சூடுவெந்தபுலம் - விஸ்தீரணம் : 0.2988 ஹெக்டயார்**

வடக்கு : ரீ. நாகலிங்கம், மண்டலேஷ்வரனின் மனைவி கமலா ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி ; கிழக்கு : வீதி, எஸ். சிவகுருநாதன், என். மீனாம்பிகை ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி ; தெற்கு : எஸ். சிவகுருநாதன், என். மீனாம்பிகை, பீ. நடராஜா, மகாலிங்கத்தின் மனைவி மனோன்மணி ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி ; மேற்கு : மகாலிங்கத்தின் மனைவி மனோன்மணி, மண்டலேஷ்வரனின் மனைவி கமலா ஆகியோர் உரிமை கோரும் சூடுவெந்தபுலம் காணி.

08 - 886

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.